# வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாணவர்களுக்கான

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2023

**அரசியல் விஞ்ஞானம் I** | **23 T I** | **ஒரு மணித்தியாலம்**

Grade: 12

சுட்டெண்:

**அறிவுறுத்தல்:**

- இவ்வினாப்பத்திரம் பகுதி A,B என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- மொத்தமாக 20 வினாக்களைக் கொண்டது
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக

### பகுதி A

- 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**01. அரசியல் என்பது,**

1) பொது நிர்வாகம் தொடர்பான விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகும்
2) எப்போதும் சமூக நலனுடன் தொடர்புடையதாகும்
3) தேர்தல் செயன்முறைகளுடன் வரையறுக்கப்பட்டதாகும்
4) பிரஜைகள் மத்தியில் நிலவும் ஒரு சமூகப் பிரயோகம் ஆகும்
5) சமூகத்தில் ஒழுக்க விழுமியங்களை கற்பதுடன் தொடர்புடையதாகும் (……..)

**02. அரசியல் விஞ்ஞானம் என்பது,**

1) அரசியல் தோற்றப்பாடுகள் மற்றும் நிகழ்வுகளை விஞ்ஞான மற்றும் புலமைசார் அடிப்படையில் கற்பதாகும்
2) அனுபவரீதியான கற்கைகளை நிராகரிக்கின்றது
3) விஞ்ஞான அணுகுமுறைகள் மூலமாக மட்டுமே கற்கக்கூடியது
4) ஏனைய சமூக விஞ்ஞான்களுடன் தொடர்புபடுத்த முடியாதது
5) அதிகாரப் போராட்டம் பற்றிய கற்கையுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டது (……..)

**03. அரசாங்கம் என்பது,**

1) அரசுக்கு வெளிவாரியாக நிலவும் அரசியல் நிறுவனமாகும்
2) சமூகத்தில் நிலவும் உயர் தன்மை மிக்க அரசியல் நிறுவனமாகும்
3) தொடர்ச்சியான இருப்பினைக் கொண்ட சமூக நிறுவனமாகும்
4) அரசுக்கு நிகரான பதமாகும்
5) அரசின் பிரதான மூலக்கூறுகளுள் ஒன்றாகும் (……..)

**04. அரசு என்பது,**

1) அரசாங்கத்தின் பிரிதொரு நாமமாகும்
2) சமூகத்துக்கு முன்தோன்றிய நிறுவனமாகும்
3) அரசறிவியலில் ஆரம்பம் முதல் இன்று வரையான பிரதான கருத்தியலாகும்
4) அரசாங்கத்தின் பிரதான முகவராகும்
5) நிரந்தரமற்ற நிலைப்பைக் கொண்டதாகும் (……..)

**05. தாராண்மைவாதம்,**

1) அரசு வர்க்கச் சமூகங்களில் நிலைகொள்ளும் என வாதிடுகின்றது

2) பிரஜைகளின் தனிபப்பட்ட சுதந்திரத்தினைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டது
3) வர்த்தகச் செயற்பாடுகளில் அரசின் தலையீட்டினை ஊக்குவிக்கின்றது
4) மாக்சியவாதிகளால் ஆதரவு வழங்கப்பட்ட ஓர் அரசியல் கருத்தியலாகும்
5) சிவில் சமூக செயற்பாட்டினை அதைரியப்படுத்துகின்றது (……..)

- **06** முதல் **08** வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள ஐந்து கூற்றுக்களில் சரியான கூற்றினை அல்லது கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க

**06. அரசியல் கட்சிகளாவன,**

A. அரசியலில் மிக நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டன
B. அரசாங்கத்துக்கு வெளியே நின்று அழுத்தங்களைப் பிரயோகிப்பன
C. பொதுநல மேம்பாட்டை நோக்காகக் கொண்டு ஒழுங்கமைந்தன
D. பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமையில் தவிர்க்க முடியாதன
E. தனிப்பட்ட நலன்களை முன்னேற்றும் இலக்குடையன

1) A மட்டும் சரியானது
2) A மற்றும் C சிரியானவை
3) B,C,D மற்றும் A சரியானவை
4) C மற்றும் D சரியானவை
5) A,B மற்றும் C சரியானவை (……)

**07. ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாதிரியானது,**

A. தனியொரு அதிகார மையத்தைக் கொண்டது
B. சமூக பல்வகைத் தன்மையைப் பாதுகாக்கின்றது
C. செயற்றிறனும் ஜனநாயகத் தன்மையும் கொண்டது
D. அதிகாரப் பங்கீட்டை அடிப்படையாகக் கொண்டது
E. ஒப்பீட்டளவில் உறுதியும் பலமும் அற்றது

1) A 2) AB 3) ABC 4) ABCD 5) ABCDE (……)

**08. ஜனாதிபதி அரசியலமைப்பு மாதிரியானது,**

A. அதிகாரப்பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது
B. ஒப்பீட்டளவில் ஜனநாயகப் பண்புமிக்கதாயினும் செயற்றினற்றது
C. அவசரகால நிலமைகளுக்கு அதிகம் பொருத்தமானது
D. நாம மற்றும் உண்மை என்ற இரு நிறைவேற்றாளர்களைக் கொண்டது
E. சட்டத்துறையிலிருந்து நிறைவேற்றுத்துறையை சுதந்திரமாக தொழிற்படுத்தக் கூடியது

1) AB, தவிர்ந்த C,D,E சரியானவை
2) A,B,C மற்றும் E சரியானவை
3) B,C,D மற்றுமு் E சரியானவை
4) B,D தவிர்ந்த A,C,E சரியானவை
5) A,B,C தவரிந்த D,E சரியானவை (……)

- **09** தொடக்கம் **13** வரையிலான ஒவ்வொரு வினா தொடர்பாகவும் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள 1,2,3,4,5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதைத் தெரிவுசெய்து அதனிலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| கூற்று I | கூற்று II |
| --- | --- |
| **09.** புராதன கிரேக்க நகர அரசுகளில் பிரசைகள் நேரடி ஜனநாயக ஆட்சி முறையில் பங்கேற்றனர். | சட்ட, நிர்வாக மற்றும் நீதிப பரிபாலன விடயங்களில் நேரடியாக பங்கேற்கும் செயற்பாட்டுப் பிரஜையாக விளங்கினர். (......) |
| **10.** துாராண்மைவாதமும் குடியரசு வாதமும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட அரசியல் கருத்தியல்கள் அல்லாதபோதும் வேறுபாடுகளையும் கொண்டுள்ளன | மதச்சார்பற்ற வாதம் அரசியலையும் மதத்தையும் ஒன்று கலக்காத அரசியல் கருத்தியலாகும் (......) |
| **11.** ஒற்றையாட்சிக்கும் சமஷ்டியாட்சிக்கும் இடைப்பட்ட சமஷ்டிப் பண்புகளை மிகையாகக் கொண்டதே அர்த்த சமஷ்டி முறையாகும | ஒற்றையாட்சிக்கும் சமஷ்டியாட்சிக்கும் இடைப்பட்ட ஒற்றையாட்சிப் பண்புகளை மிகையாகக் கொண்டதே கூட்டாண்மை சமஷ்டிமுறையாகும். (…...) |
| **12.** கபினட் அரசியலமைப்பு மாதிரியானது அரசின் மற்றும் அரசாங்கத்தின் தலைவராக ஒரே நபரையே கொண்டிருக்கம் | கபினட் அரசியலமைப்பு மாதிரியானது அரசியல் கட்சியை அடிப்படையாகக் கொண்ட கட்சி அரசாங்க முறையாகும் (.........) |
| **13.** முரண்பாடுகள் மனித வாழ்க்கையில் வதிர்க்க முடியாத அம்சமாகும் | சகல முரண்பாடுகளும் நடைமுறையில் முற்றுமுழுதாக எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன (…..) |

## பகுதி - B

**14.** புராதன இந்தியாவிலும் சீனாவிலும் தலைசிறந்து விளங்கிய அரசியல் சிந்தனையாளர்கள் இருவரையும் முறையே தருக

1)……………………………………………………………………………………………………

2)……………………………………………………………………………………………………

**15.** அரசறிவியலின் நவீன அணுகுமுறைகள் இரண்டு தருக.

1)……………………………………………………………………………………………………

2)……………………………………………………………………………………………………

**16.** கலப்பு நிறைவேற்று அரசியலமைப்பு மாதிரியினை கடைப்பிடிக்கும் இரு நாடுகளைக் குறிப்பிடுக

1)……………………………………………………………………………………………………

2)……………………………………………………………………………………………………

**17.** அரசறிவியலில் உள்ளடக்கப்படும் உப துறைகள் இரண்டு தருக

1)……………………………………………………………………………………………………

2)……………………………………………………………………………………………………

**18.** இந்திய மதச்சார்பின்மை வாதத்தின் இரு பிரதான கருப்பொருள்களும் எவை?

1)……………………………………………………………………………………………………

2)……………………………………………………………………………………………………

**19.** 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்றாம் உலக நாடுகளில் சமவுடைமை வாதத்தைக் கடைப்பிடித்த இரு நாடுகளையும் அந்நாடுகளின் அரசியல் தலைவர்களையும் தருக

1)……………………………………………………………………………………………………

2)……………………………………………………………………………………………………

**20.** முரண்பாட்டின் செயற்படுதன்மையை அடிப்படையாக வைத்து முன்வைக்கப்படும் இரு பிரதான அணுகுமுறைகளும் யாவை?

1)……………………………………………2)………………………………………………………

# வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாணவர்களுக்கான

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2023

அரசியல் விஞ்ஞானம் II | 23 | T | II | இரண்டு மணித்தியாலம்

Grade: 12

சுட்டெண்:

**அறிவுறுத்தல்:**

- வினாத்தாள் - 2 ஆனது பகுதி I, பகுதி II என இரு பிரிவுகளைக் கொண்டன, பகுதி I இலிருந்து குறைந்தது ஒரு வினாவையும், பகுதி II இலிருந்து குறைந்தது ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி – I

01. அரசியல் விஞ்ஞானத்தை ஆய்வு செய்யும் பின்வரும் அணுகுமுறைகளை விபரிக்குக

1) தத்துவ அணுகுமுறை (10 புள்ளிகள்)
2) பெண்ணிலை வாத அணுகுமுறை (10 புள்ளிகள்)

02. அரசியல் கருத்தியல் என்றடிப்படையில் பின்வருவனவற்றுள் இரண்டை விளக்குக

1) தாராண்மை வாதம் (10 புள்ளிகள்)
2) சமவுடமைவாதம் (10 புள்ளிகள்)
3) மதச்சார்பின்மை வாதம் (10 புள்ளிகள்)
4) குடியரசுவாதம் (10 புள்ளிகள்)

03.

1) சமஷ்டி அரசியலமைப்பு மாதிரியின் நிறைகளும் குறைகளும் (10 புள்ளிகள்)
2) கபினட் அரசியலமைப்பு மாதிரியின் பண்புகள் (10 புள்ளிகள்)

### பகுதி – II

04. அரசியலை கல்வியாகக் கற்றல் என்பது இரு பொருள்களில் பொதிந்துள்ளது ஆராய்க (20 புள்ளிகள்)

05. அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக் குழுக்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஆராய்க (20 புள்ளிகள்)

06. கீழ்வருவனவற்றள் எவையேனும் இரண்டினைத் தெரிவு செய்து விடையளிக்குக

1) அரசியல் கற்கையின் பிரிவுகள் (10 புள்ளிகள்)
2) நவீன ஆள்புல அரசின் கூறுகள் (10 புள்ளிகள்)
3) அரசும் அரசாங்கமும் (10 புள்ளிகள்)
4) முரண்பாடுகள் சாதக மற்றும் பாதக என இரு பக்கங்களைக் கொண்டவை விமர்சிக்குக (10 புள்ளிகள்)